ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2372/06 - 2024 පෙබරවාරි මස 19 වැනි සඳුදා - 2024.02.19

*2372/06 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இங்குள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டம் தொடர்பாக அதற்கு நேரொத்த பதிவிலே அவ்வட்டவணையின் II ஆம் நிரல் குறிப்பிடப்பட்டுள்ள அளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதிக்கின்றேன்.

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| பண்டம் உருப்படி | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விபரம் | |
| 1. | 07.13 | | கறுப்பு உளுந்து : | |
| | | 0713.31.22 | தோல் நீக்கப்பட்டவை அல்லது பிளக்கப்படாதவை | கி. கி. ஒன்றுக்கு 300 ரூபா |
| | | 0713.31.29 | பிற | கி. கி. ஒன்றுக்கு 300 ரூபா |
| 2. | | 0713.31.19 | பிற - பச்சைக் கடலை (பாசிப்பயறு) | கி. கி. ஒன்றுக்கு 300 ரூபா |
| 3. | | 0713.35.90 | பிற - கௌபி | கி. கி. ஒன்றுக்கு 300 ரூபா |
| 4. | 10.05 | 1005.90 | மக்காச் சோளம் | கி. கி. ஒன்றுக்கு 25 ரூபா |


1A - PG 6652 — 431 (2024/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| பண்டம் உருப்படி | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விபரம் | |
| 5. | 10.08 | 1008.21.10 | விதை - குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) | கி. கி. ஒன்றுக்கு 300 ரூபா |
| | | 1008.21.90 | விதை - பிற (திணை) | கி. கி. ஒன்றுக்கு 300 ரூபா |
| | | 1008.29.10 | விதை - குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) | கி. கி. ஒன்றுக்கு 300 ரூபா |
| | | 1008.29.90 | பிற - (திணை) | கி. கி. ஒன்றுக்கு 300 ரூபா |

2. மேற்குறிப்பிட்டவாறான மக்காச் சோளம், கறுப்பு உளுந்து, பாசிப்பயறு, கௌபி மற்றும் குரக்கன் போன்றவற்றின் இறக்குமதியானது விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

3. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்களின் அறவீட்டுச் சட்டம் பிரிவு 2 இன் கீழானவையும், 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதிய 2321/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டவையுமான கௌபி (இ. மு. குறியீடு 0713.35.90) மற்றும் குரக்கன்/பிற - திணை (இ. மு. குறியீடு 1008.21.10, 1008.21.90, 1008.29.10, 1008.29.90) இறக்குமதி தொடர்பிலான கட்டளையானது 2024, பெப்புருவரி 20 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றன.

4. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2024, பெப்புருவரி 20 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட கட்டளை 2024, திசெம்பர் 31 ஆந் திகதி வரை செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, பெப்புருவரி 19.

EOG 02 - 0147

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.